REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆவணி 11உ செவ்வாய் (27—8—57) ★ ★ வெளியூர்: ஆவணி 12உ புதன் (28—8—57) [இதழ் 63

மனித உழைப்புக்கு எதிராக!

இந்திய உபகண்டத்தில் வடபகுதியில் அமைக்கப்பட்டுள்ள மூன்று உருக்குத் தொழிற்சாலைகளில் ஒன்றான பிலாயில் இரயில் பாதை அமைப்பதற்குத் தேவைப்படும் இயந்திரங்கள் ரஷ்யாவில் தயாரிக்கப்படுகிறதாம்.

இந்த இயந்திரம் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் செய்யக்கூடிய வேலையை குறைவான நேரத்தில் திறமையுடன் செய்து முடிக்குமாம். வெப்பநிலை உள்ள பகுதிகளில்கூட இந்த இயந்திரங்கள் நன்முக இயங்குமாறு அமைக்கப்பட்டுள்ளதாம். இயந்திரங்கள் பழுதடைந்தால், அதன் உறுப்புக்களை புதுப்பிப்பதற்கான தனிப் பாகங்களும் அந்த இயந்திரங்களுடன் அனுப்பப்படுமாம்!

தோழர் சம்பத் சிருஷ்டிக்கும் வரலாறு

‘அவரது முதல் முழக்கம் ஒப்பற்றது’

‘புதியதோர் சிந்தனைக்கு வழிகாட்டி யிருக்கிறார்’

‘சம்பத்தின் கருத்துக்களுக்குப் பல திக்கிலிருந்தும் பாராட்டு’

‘காங்கிரஸ் உறுப்பினரும் ஆதரிக்கின்றனர்’

“பிரதேச நலன்களைப் பிரதானப்படுத்த புதியதோர் அணிவகுப்பு

புதுடில்லி, ஆக. 27—

டெல்லி மக்கள் சபையில், வடநாட்டு ஏகாதிபத்திய வெறியர்களின் எதிர்ப்புக் கூச்சலுக்கிடையேயும் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சிய வரலாறு குறித்து எழுப்பிய முதல் முழக்கம், எதிர்பாராத பலன்களையும், விளைவுகளையும் உருவாக்கியிருப்பது குறித்து ‘பேர்டி ஞக்ஸ்’ என்பார், சென்னை ஆங்கில தினசரியான ‘மெயில்’ 26—8—57-ந் தேதிய இதழில் எழுதியுள்ள ‘டெல்லிக் கடிதம்’ விவரிக்கிறது; அதன் பகுதிகளைக் கீழே தருகிறோம்:—

“......தோழர் சம்பத் அவர்கள், மிகுந்த நம்பிக்கையுடனும் கம்பீரமாகவும் பேசினர்; உண்மையிலேயே ஒரு முதல் முழக்கம் என்ற வகையில் அது ஒப்பற்றதாயிருந்தது......!

“ஆனல் தோழர் சம்பத்தின் பேச்சு, பாராளுமன்ற வட்டாரங்களில் எதிர்பாராத, நூதனமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது.

“பாராட்டப்பட்டதைவிட உயர்ந்த நோக்கத்துடனும், கணிப்புடனும் அந்த தி. மு. க. தலைவர் பேசியிருக்கிறார் என்பது தெளிவு; ஒருபுறம் ஆளும் கட்சியைச் சேர்ந்த எண்ணற்றவர்களும், மறுபுறம் அளவுக்கு மீறிச சந்தடி செய்கிற கம்யூனிஸ்டு எதிர்க்கட்சியினரும் ஆகச் சேர்ந்து ஆதிக்கம் செலுத்துகிற ஒரு சபையில், இதுவரை பேசுவதற்கு வாய்ப்பே பெருத பல சிறு கூட்டத்தவர்கள் — பல விதக் கருத்துக்களைக் கொண்டவர்கள் இருக்கிறார்கள். மக்கள் சபையில் உள்ள இவர்களது ‘இதயநாடி’களை எல்லாம் தோழர் சம்பத் அனுதாபத்துடன் தடவினர். இதனை, சம்பத் பேசி முடித்தபின் பல உறுப்பினர்களும் அவரை அணுகி, மொழி போன்ற அடிப்படைப் பிரச்சினைகளில் அவர் வெளியிட்ட துணிவான — தெளிவான கருத்துக்களுக்காகப் பாராட்டினர் என்பதிலிருந்து அறியலாம்.

“ஆந்திராவிலிருந்து வந்துள்ள ஒரு காங்கிரஸ் உறுப்பினர், சம்பத்தின் கருத்துக்கள் தனக்கும் உடன்பாடானவைதான் என்று தெரிவித்தார்; ஆனல் அவர், ‘தோழர் சம்பத் அவர்களை வெளிப்படையாக ஆதரிப்பதற்கு இன்னும் கொஞ்ச நாள் செல்ல வேண்டும் என்று கூறினர்.

“அந்தக் காங்கிரஸ் உறுப்பினர், தாம் கட்சிக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவர் என்றாலும், தோழர் சம்பத் தெரிவித்த கருத்துக்களைக்கொண்ட பலர் காங்கிரஸிலிருப்பதாகவும், ஆனல் தன்னைப்போலவே அவர்கள் எல்லாம், இந்தப் பிரச்சினைகளை முன்வைத்துப் போராடுவதற்கு இன்னும் காலம் கனியவில்லை என்று கருதுவதாகவும் கூறினர்.

“தோழர் சம்பத் அவர்களைப் பாராட்டியவர்கள் பலராவர். மராட்டியத்தைச் சேர்ந்த இரு பிரபல உறுப்பினர்கள்—அவர்களில் ஒருவர் விவசாயிகள் மற்றும் தொழிலாளர் கட்சித் தலைவர்; ஒரிசாவைச் சேர்ந்த கணதந்திர பரீஷத் உறுப்பினர்கள் —இவர்களில் வலதுசாரிகளும், இடதுசாரிகளும் கலந்து இருக்கிறார்கள்—இவர்கள் பல பிரச்சினைகளில் கருத்து வேறுபாடு கொண்டவர்கள் என்றாலும், ஒரிசாவின் பிரச்சினைகள் என்றால் எல்லோரும் ஒன்றுபட்டு நிற்கிறவர்கள்; பீகாரைச் சேர்ந்த ஜார்கண்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள்—இவர்கள் எல்லாம், தோழர் சம்பத் அவர்களைப் பாராட்டுவதற்கு முன் வந்தனர்.

“இதுவரை யாரென்று தெரியாதிருந்த ஒரு உறுப்பினரின் ஒரு உரை, மிகப் பிளவுபட்டுக் கிடக்கும் பலதரப்பட்டவர்களை ஒன்று திரட்டியிருப்பது, உண்மையிலேயே அசாதாரணமானதாகும்.

“...ஆனல், இவர்களை எல்லாம் மக்கள் சபையில், ஒருவிதத்தில், நூதனமானதோர் பிணைப்பில் தொடர்பு கொள்ளச் செய்யும் ஒரு புதிய சிந்தனைக்கு தோழர் சம்பத் வழிகாட்டியிருக்கிறார். இந்தப் பிணைப்பு. இதர அரசியல் கட்சிகளின் (இந்தியா முழுமைக்குமான) ஒருமுகப்பட்ட நலன் என்பதிலிருந்து வேறுபட்ட, பிரதேச நலன் என்றதோர் சக்தி வாய்ந்த பிணைப்பாகும்

“மக்கள் சபையில் தோழர் சம்பத்தின் பேச்சிற்குப் பிறகு, பல கட்சித் தலைவர்களும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருக்கின்றனர். அந்தக் கட்சியினர் எல்லாம் தங்கள் பிரதேசத்திற்குரிய பிரதான பிரச்சினைகளுக்காகப் பாடுபடக் கூடியவர்கள் என்பது, அந்தப் பேச்சுவார்த்தைகளிலிருந்து தெரிய வருகிறது

“தங்கள் தங்கள் கட்சிகளின் அகில இந்தியக் கண்ணேட்டங்களுக்காக, பிரதேசங்களின் ஜீவாதாரமான நலன்களைப் பின்னுக்குத் தள்ளிவிடுகிற அகில இந்தியக் கட்சிகள் எனக் கூறப்படும் காங்கிரஸ், சோஷலிஸ்டு, கம்யூனிஸ்டுக் கட்சிகளிலிருந்து இந்தக் கட்சிகளை வேறுபடுத்திக் காட்டுவது, அவற்றின் (பிரதேச நலன் என்ற இந்தக்) கண்ணேட்டம் தான்.

“நாளும் அதிகரிக்கும் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பினை மாநில சர்க்கார்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருப்பதால், பிரதேசக் கட்சிகள் தங்கள் தங்கள் பிரதேசங்களில் அதிகமான முக்கியத்துவம் பெறும் என்றும், இந்தக் கட்சியினர் கருதுகின்றனர்.

“இவர்களேகூட ஒருவருக்கொருவர் சில சந்தர்ப்பங்களில் மோதிக்கொள்ள நேரிட்டாலும்கூட, மத்திய சர்க்காருக்கு எதிரான தங்கள் பிரதேச நலன் என்ற விவகாரத்தில் இவர்களின் கருத்து பொதுவானதாக இல்லாவிடினும்இணையானதாக-ஒத்ததாக இருக்கலாம். இவர்கள் அனைவரும் தங்கள் சக்திகளை ஒன்று திரட்டினல், இவர்கள் தங்கள் கருத்தின் அடிப்படையில்-வெவ்வேறு கருத்துடையவர்களானலும்-மக்கள்சபையைப் பொறுத்து ஒன்றுபடவும், ஒருவருக்கு ஒருவர் உதவவும் முடியும்.

‘தோழர் சம்பத் அவர்களின் பேச்சு முடுக்கிவிட்டிருக்கிற, ‘ஒன்றுபடவேண்டும்; கூட்டுச்சேர வேண்டும்’ என்ற இயக்கத்தின் முக்கியத்துவம் இது தான்.

“இதுபோன்ற, வேறுபாடுகளைக் கொண்ட பல கட்சியினரையும் ஒன்றுபடுத்தும் முயற்சி, சென்ற சபையில், காலஞ்சென்ற டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி அவர்களால் மேற்கொள்ளப்பட்டது அனைவரும் அறிந்ததேயாகும். காங்கிரசின் மூர்க்கத்தனமான எதிர்ப்பினல் தொல்லைப்பட்ட முகர்ஜியின் இந்த கட்சியின் இயலாமையினல் அந்த முயற்சி தோற்றது; ஒன்றுபட இருந்த கட்சிகள் விலகிச் சென்றன.

“மேலும், சியாம் பிரசாத் முகர்ஜி தலைமை தாங்கிய ‘ஜன சங்க’மும் ஒரு அகில இந்தியக் கண்ணேட்டமுடையது என்பதுடன் இதர கட்சிகளிடை ஆதிக்கம் வகிக்கவும் நினைத்தது.

“இப்போது ஒன்றுபட்டுப் போராட வேண்டும் என்ற கருத்து கொண்டிருக்கிற பல கட்சியினருக்கும், ஒரு அகில இந்தியக் கட்சி அமைக்க வேண்டுமென்கிற எண்ணம் இல்லை.

“ஆரம்பக் கட்டத்திலும், தெளிவில்லாமலும் இருக்கிற இந்தக் கருத்துக்கள் உருவாகுமானல், வேறுபட்ட பிரதேச நலன்களைக் கொண்ட ஒரு கோஷ்டியினராகவே இவர்கள் இருப்பர். ஆனலும் இவர்கள், மக்கள் சபையில் ஒரு கணிசமான பகுதியினராக விளங்கமுடியும்.

“இதுபோல ஒரு ஒன்றுபட்ட கோஷ்டியாக அமைவதற்கு இன்னும் வெளிப்படையான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆனல், ஒன்று சேரக்கூடியவர்களாக இருப்பவர்கள்:

“பீகார் ஜார்கண்ட் கட்சி ஆறு பேர்; பம்பாய் விவசாயிகள் மற்றும் தொழிலாளர் கட்சி நால்வர்;சோடாநாகபுரிசந்தால் பர்கானு ஜனதா கட்சி மூவர்; மக்கள் ஜனநாயக முன்னணி இருவர்; கணதந்திர பரீஷத் எழுவர்; தி. மு. க. இருவர்; எண்ணற்ற சுயேச்சைகள்—எல்லாமாகச் சேர்ந்து 30 பேர் தேறக்கூடும். சுயேச்சைகள் இன்னும் அதிக ஆதரவு தந்தால் இது அதிகமாகக்கூடும். உதாரணமாக, தமிழ் நாட்டிலிருந்து வந்துள்ள டாக்டர் கிருஷ்ணசாமியும், சிவராஜும் தி. மு. க.—வுடன் சேரலாம்.”

கலைவாணர் உடல்நிலை

சென்னை, ஆக. 27—

சென்னை மருத்துவ மனையில் தங்கி கடந்த இரண்டுவார காலமாகச் சிகிச்சை பெற்றுவரும் கலைவாணர் என் எஸ். கிருஷ்ணன் அவர்கள் மேலும் குணமடைந்துவருகிறார்; விரைவில் பூர்ண குணமடைவார் எனக் கூறப்படுகிறது

உடலில் சூரிய ஒளிமூலம் புத்துணர்ச்சி ஏற்படச் செய்யும் பொருட்டு, நேற்றுக் காலை அவரை, சுமார் அரைமணி நேரம் திறந்த வெளியில் சூரிய ஒளிபடும்படியாக அமர்ந்திருக்கச் செய்தனர். தினசரி, ஊசிகள்மூலம் மருந்துகள் செலுத்தப்படுகின்றன.

நேற்று, புரட்சி நடிகர் எம் ஜி. இராமசந்திரன், என். எஸ். கே. அவர்களை மருத்துவ மனையில் கண்டு உடல்நிலைபற்றி கேட்டறிந்து சென்றார்.

போலீஸ் ஐ. ஜி. மீது குற்றச்சாட்டுகள்

விசாரணை முடிவுற்றது

சென்னை, ஆக. 26—

தோழர் க. அன்பழகன் அவர்கள் சட்டசபையில் போலீஸ் மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, உயர்தர போலீஸ் அதிகாரிமீது எழுப்பிய குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக சர்க்கார் நியமித்த விசாரணைக் குழு தனது அறிக்கையை சர்க்காருக்குத் தந்துவிட்டதாகத் தெரியவருகிறது.

போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல்மீது எழுந்த அந்தக் குற்றச்சாட்டுகளை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி பி. என். இராமசாமி அவர்கள், தமது விசாரணை அறிக்கையை உள்நாட்டிலாகா செயலாளரிடம் தந்துள்ளதாகத் தெரியவருகிறது.

சென்னை - ஆந்திர எல்லைத் தகராறு

படாஸ்கர் அறிக்கை மீது விவாதம்

புதுடில்லி, ஆக. 26—

சென்னை—ஆந்திர எல்லைத் தகராறு பற்றி ஆராய்ந்து தீர்ப்பளிக்குமாறு மத்திய அரசாங்கம் நியமித்த படாஸ்கர், தன் முடிவுகளை மத்திய அரசாங்கத்திற்கு தெரிவித்துள்ளார். அந்த முடிவுகளைப் பற்றி ஆராய்ந்து இறுதியான தீர்ப்பை வெளியிட டில்லியில் ஏற்பாடுகள் நடைபெற்றுவருகிறது.

சென்னை மாநில முதலமைச்சர் காமராசரும், ஆந்திர மாநில முதலமைச்சர் சஞ்சீவிரெட்டியும், மத்திய உள்நாட்டு அமைச்சர் பந்துடன், படாஸ்கர் அறிக்கையைப் பற்றி ஆகஸ்டு 28-ந் தேதி விவாதிக்க ஏற்பாடாகியுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறை சீர்திருத்தங்கள்

கைதிகளின் ஆலோசனைபெற உ. பி. சர்க்கார் திட்டம்

இலட்சுமணபுரி, ஆக. 24—

சிறைச் சீர்திருத்தங்கள் பற்றி சிறையில் வாடும் கைதிகளையும், தண்டனை அனுபவித்துத் திரும்பியவர்களையும் கலந்து ஆலோசிப்பதற்காக அவர்களடங்கியமாநாடு ஒன்றைக் கூட்ட உ. பி. சர்க்கார் உத்தேசித்திருக்கிறதாம்.

நம் நாடு
தி. மு. க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 27—8—57 செவ்வாய்

மிக நன்றே செய்தார்!

"எங்கள் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், உலகில் எந்த சக்தியும் இச்சகம் பேசியோ, நிர்ப்பந்தம் செய்தோ இந்தி ஏகாதிபத்தியத்திற்கு எங்களைப் பணிய வைத்துவிட முடியாது என்பதை மிகப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

இப்படி சென்னைக் கடற்கரையில், தம் மொழி மக்கள் முன் பேசி இருந்தால், கடல் ஒலியையும் தணித்துவிடக்கூடியவகையில் கையொலி எழும்பி இருக்கக்கூடும். ஆனால் அக்கடற்கரை எச்சரிக்கை, டெல்லியில் கோலோச்சிக் கொண்டிருக்கும் இந்திமொழி வெறி தலைக்கேறியுள்ள உள்நாட்டு அமைச்சர் போன்றவர் செவியுள் புகுந்திருக்க முடியாது. அதுபோன்றே, மக்கள் சபையில் வீற்றிருக்கும் சில நூறு இந்தி ஏகாதிபத்திய வாதிகளின் காதுகளிலும் நுழைந்திருக்க இயலாது. தமிழ் மக்களின் உள்ளங்களில் பாய்ந்து, அவர்களின் உணர்வைக் கிண்டிக் கிளருவதுடன் காற்றில் கலந்துவிட்டிருக்கும், அப்போர்க்குரல்.

இதே வகையில், நமது கழகத்தின் அடிப்படை இலட்சியம் பற்றியும், நமது உயிரினும் உயர்ந்த உரிமை முழக்கம் குறித்தும் நமது இயக்கத்தவர் ஆற்றிய அரிய உரை எதனையும் டெல்லியில் கொலு வீற்றிருக்கும் குணக்கேடர்கள் கேட்டது கிடையாது. டெல்லியில் உள்ளாரே கேட்கும் வாய்ப்பினைப் பெற இயலாதபோது, வேற்று நாட்டவர் கேட்பது எங்ஙனம் இயலும்?

எனவே, நமது இந்தி எதிர்ப்பின் உள்ளடக்கத்தை, அவ்வெறுப்பில் அடங்கி இருக்கும் நமது அடிப்படைக் குறிக்கோளை, இந்தி வழிவந்த வடவர் இதுவரை நன்கு தெரிந்துகொள்ளாமலே காலங்கழித்து வந்தனர். அதே நேரத்தில் நமது கழகத்தையும், அதன் கருத்தறியாமலே காய்ந்தும் வந்தனர்.

நமது கழகத்தின் இந்தி எதிர்ப்பு வெறும் மொழி எதிர்ப்பு அல்ல. அதே போன்று இந்தித் திணிப்பும், வெறும் மொழித் திணிப்பு அல்ல. இந்த இரண்டு எதிர்ப்பிலும் திணிப்பிலும் அடங்கியுள்ள உரிமை வேட்கையையும், ஆதிக்கவெறியையும் தெளிவுபட மக்கள் சபையில் எடுத்துக் காட்டியுள்ளார்— அவ்வாறு எடுத்தியம்புவதில் முழு வெற்றியும் எடுத்த எடுப்பிலேயே பெற்று உள்ளார் நமது இளவல் சம்பத்.

மக்கள் சபையில் இளவல் சம்பத் இருக்கின்றாரா இல்லையா என்ற பேரையம் நமது கழகத்தின் முன்னணியில் இருப்பவர்களிடம்கூட பரவலாக இருந்துவந்தது. தமிழகத்திலிருந்து சென்ற மற்றக் கட்சி உறுப்பினர்கள் மக்கள் சபையில் தாங்கள் புரிந்ததாகச் சிலபல கூறிக்கொள்ளும்பொழுது, உள்ளப் பதைபதைப்பும், சிறிதளவு அச்சமும், இளவல் சம்பத்தின் சொல்லாற்றலில் பெரும் அளவு ஐயப்பாடும் நம்மில் பலரை ஆளாக்கிக்கொண்டன. அவ்வளவையும், இளவல் சம்பத்தின் முதல் முழக்கம், நம் அனைவரிடத்திலுமிருந்து விரட்டிவிட்டது.

அவர் பேச்சின் தன்மை குறித்து சென்னை 'மெயில்' இதழின் டெல்லி மக்கள் சபை நிருபர், 'எதிரொலிக்குப் பேரொலி' எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இளவல் சம்பத் எழுப்பிய முதல் உரிமைக்குரல் குறித்துத் 'தமிழ்நாடு' இதழ் தனது பாராட்டுதலைத் தெரிவித்திருக்கின்றது.

இந்தி ஏகாதிபத்திய எதிர்ப்பு இளவல் சம்பத்தின் வாயிலிருந்து எரிமலை என வெடித்து பயங்கரமான தீக்குழம்பைக் கக்குவது கண்டு மக்கள் சபையில் வீற்றிருக்கும், இந்தி வெறி தலைக்கேறிப் போயுள்ள காங்கிரசுக் குணவான்கள் சிலர், தங்கள் நிலையையும் இடத்தையும் மறந்து, காட்டுக் கூச்சல் போட்டுள்ளனர். ஆனால், அவர்களே பின்னர் வாய்மூடி, இளவல் சம்பத்தின் உரிமை முழக்கத்தைக் கண்ணும் கருத்துமாகக் கேட்டனராம்.

அதுகுறித்து சம்பத் நமக்கு வரைந்துள்ள அன்பு மடலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்; அது, இது:—

"இடையிடையே காங்கிரசு உறுப்பினர் பலரும், தமது வாடிக்கையான கூச்சல் பாணத்தைப் பிரயோகிக்க முயன்று எழுந்தவர்கள் அனைவரும் பேசாமல் அமர்ந்துவிட்டனர்—மிக அமைதியாகவும், கவனத்துடனும் பின்னர் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தனர்."

பொதுவாகத் தென்னக மக்களும் அதிலும் குறிப்பாகத் தமிழக மக்களும் மட்டுந்தான் இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்க்கின்றார்கள் என்பதில்லை. வங்க மக்களும் இந்தி ஏகாதிபத்தியத்தைத் தீவிரமாக எதிர்த்து வருகின்றனர் என்ற மகத்தான உண்மையை, இளவல் சம்பத்தின் அன்பு அஞ்சல் நமக்கு அறிவுறுத்துகிறது; அப்பகுதி, இது:—

"வங்க உறுப்பினர்கள் பலரும் எனது பேச்சு, தங்கள் கருத்தை மிகத் துணிவாகப் பிரதிபலிக்கிறது என்றுகூறி பலப்பட பாராட்டினர்."

துணிவுக்கு எடுத்துக்காட்டாக இருப்பவர்கள் எனக் கருதப்பட்டுவரும் வங்கத்தார்களே, நமது இளவலின் துணிவைப் பாராட்டுகின்றனர் என்பதைக் கேள்வியுறும்பொழுது, நமது இதயம் நம்மையும் அறியாமலே பூரிப்பால் துள்ளிவிளையாடுகிறது என்ற உண்மையை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

இளவல் சம்பத் தமிழில் நல்ல பேச்சாளரேயல்லாது, ஆங்கில மொழியில் பேசும் ஆற்றல் பெற்றவர் அல்லர். முதல் உரை; அதிலும் இடைமறிக்கும் எதிர்ப்பாளர்களிடை, முதல் முறையாகத் தனக்குப் பயிற்சி இல்லாத ஒரு மொழியில், பேசி, தம்மிடம் நம்பிக்கை வைத்துத் தமிழ் மக்களால் ஒப்படைக்கப்பட்டுள்ள சிறந்த கடமை ஒன்றை வெற்றிகரமாக நிறைவேற்றிவைப்பது என்பது, அவ்வளவு இலகுவானதல்ல என்பதை எவரும் அறிவர். அவ்வரிய செயலைச் செய்து, தமிழர்கள் வைத்த நம்பிக்கைக்கு ஊறுதேடாது, வெற்றிகண்ட இளவல் சம்பத்தை கடமை வீரர் என்றே நாம் முழுமனதுடன் பாராட்டுகிறோம்.

தனது நிலைபற்றி சம்பத்,

"சபையில் முதல் உரை என்பதோடு, ஆங்கிலத்திலும் இதுவே முதல் உரையாக இருந்தும் கழகத்தின் பெயரைக் காப்பாற்றிவிட்டேன் என்பதைப் பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்"

எனத் தெளிவுபடுத்தியுள்ளார்.

நமது கழகத்தின் பெயரை, இளவல் சம்பத், மக்கள் சபையில் நமது இலட்சியத்தை நிலைநாட்டியது போன்றே, நூற்றுக்கு நூறு நிலைநாட்டியுள்ளார். அதற்காக, அவர் பெருமிதமடைகின்றார். அப்பெருமிதத்தில் நாமும் பங்கு கொள்ளுகிறோம். அதேநிலையில் மற்றவர்களையும் பெருமிதம் கொள்ளப் பணிவன்புடன் வேண்டிக்கொள்ளுகிறோம்.

'நன்றே செய்தாய் சம்பத்' என்று மீண்டும் ஒரு முறை கடமையாற்றிய கர்மவீரரைப் பாராட்டுகிறோம்.

விடுதலைப் பாதையில் வேகமாகச் செல்கிறது தி. மு. கழகம்

கட்டை விரலை எடுத்து விடுவோம் என்றவர்கள் அதன் சுட்டு விரலை இன்று கவனிக்கின்றனர்

சி. பி. சிற்றரசு தெளிவுரை

சென்னை, ஆக. 26—

வண்ணை கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகத்தின் சார்பில் 21—8—57 மாலை 6-30 மணிக்கு ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் ராபின்சன் பூங்கா திடலில் தோழர் கே. எஸ். எம். இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் நெல்லைஇராமய்யா, சுப்பிரமணியம் ஆகியோர் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசியபின், தோழர் என். சீவரத்தினம் சிறிது நேரம் பேசினார்.

அவர் பேசுகையில், தென்னாட்டுக்கு வடநாடு இழைத்துவரும் கொடுமைகளை எடுத்துக்காட்டி, இந்தித் திணிப்பைக் கண்டித்தார். சட்டசபையில் நம் கழகத் தோழர்கள் ஆற்றிவரும் பணிகளைக்கண்டு எதிரிகளும் தலைகுனிகின்றனர் என்றும், திராவிடநாடு பிரிவினையின் அவசியம் குறித்தும் அவர் பேசினார்.

இறுதியில் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இன்று பாண்டியன் நினைவு மன்றத்தின் சார்பாக கூட்டப்பட்டிருக்கும் இக்கூட்டத்தில் அதிகார வெறியால்—பதவிப் பித்தால் சட்டசபையில் இன்னது பேசுகிறோம் என்பதை அறியாமல் பேசுகிற சிலருடைய கண்களையும் கருத்தையும் திறக்கவேண்டிய பொறுப்பிலே கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருக்கிறோம்!

"நாம் பேச்சை விற்கிறோம் என்று ஒரு அம்மையார் சொன்னாராம்; 'கள்ள மார்க்கெட்'டில் அல்ல; பகிரங்க மேடையில் விற்கிறோம்.

"உலகத்திலேயே பேச்சை விற்பதும் வாங்குவதும் இரண்டே இரண்டு இடங்களில்தான் நடந்திருக்கின்றன.

அமெரிக்காவில்...

"அமெரிக்காவில் இங்கர்சால் விற்றார்; எந்தப் பேச்சை விற்றார்? ஐக்கிய அமெரிக்காவின் பெரும்பாலான மக்களுக்கு எந்தப் பேச்சு கசப்பாகத் தோன்றியதோ, அந்தப் பேச்சைத்தான் விற்றார்; அவர் பேச்சு, மற்றவர்களின் கொள்கையளவில் இனிக்கும் என்று அவர்கள் நம்பி ஏமாந்து வாங்கவில்லை. அவர் பேச்சு கசக்கத்தான் செய்யும்; கேட்கும்போது கடுமையான பத்தியமும் இருக்க வேண்டிதான் வரும் என்றாலும் வாங்கித்தீர வேண்டிய ஒன்று என்ற முடிவிலேயே ஆயிரக்கணக்கான டாலர்களைக் கொடுத்து வாங்கினார்கள். பச்சையாகச் சொல்ல வேண்டுமானால் அவர் பேசிய நாத்திகப் பேச்சை ஆத்திகர்களிலும் பெரும்பாலோர் வாங்கினார்கள். பணம் கொடுத்து பேச்சைக் கேட்க உள்ளே வந்திருக்கிறார்களே என்பதற்காக அவர் எதையும் மறைத்து, குறைத்துக் கூறவில்லை. தன் மனதில் தோன்றிய எல்லாவற்றையுமே சொன்னார். கொள்கை எப்படியிருந்தாலும், அறிவுத் தாகம் படைத்த அந்த அமெரிக்க நாட்டு மக்கள் கேட்டுவிட்டு வெளியே வரும்போது, 'நாம் கொடுத்த பணம் தண்டம்' என்று முகம் சுளித்துக்கொண்டு வரவில்லை; 'கொடுத்த பணத்திற்கு அதிகமாகவே கொள்கையை வாங்கி இருக்கிறோம்' என்ற மன ஆறுதலோடுதான் மண்டபத்தை விட்டு வெளியே வந்தார்கள்.

அடுத்தது இங்கே!

"அடுத்தது, இந்தியத் துணைக் கண்டத்தில் தென்னகமாம் திருவிடத்தில் தி. மு. கழகத்தவராகிய நாம்தான் விற்கிறோம். எந்த முறையிலேயோ அறிவுத் துறையிலே முன்னேறிய தென்னக மக்கள்தான் அதை வாங்குகிறார்கள்; இன்னும் வாங்கிக் கொண்டே இருக்கிறார்கள்; இனியும் வாங்கத் தயாராயிருக்கிறார்கள். குறுகிய அளவிலே பார்த்தால், 'நம் கட்சிக்காரருக்கு இந்தத் திறமை வரவில்லையே' என்று அந்த அம்மையாருக்கு 'ஆத்திரம்' வந்திருக்கலாம்; பெருத்த அளவிலே பார்க்கும்போது, 'நமது நாடு இந்த அளவுக்குத் தயாராகிவிட்டதே!' என்று மனம்பூரித்திருக்க வேண்டும். இதை நாம் அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், சட்டசபை உறுப்பினர் பதவி அவர்களுக்குக் கிடைத்திருக்கின்றதே என்பதுகூட அல்ல—உறுப்பினர் பதவிக்கு இவர்கள் அகப்பட்டார்களே என்பதுதான்!

"அடுத்து இந்தியைப் பற்றி கவனிப்போம். டெல்லி மக்கள் சபையில் நம் குரலை எழுப்பியிருக்கிறார் சம்பத்; இந்தியைப் பற்றி கொள்கை விளக்கத்தைத் தெளிவாகவே அறிவித்திருக்கிறார். 'இந்தி ஏகாதிபத்தியம்' என்ற உடனே உள்நாட்டு மந்திரி அலறியிருக்கிறார். 'இந்தியா பல மொழிகளைக்கொண்ட நாடு மாத்திரமல்ல; பல நாடுகளைக் கொண்ட ஒரு துணைக்கண்டம்' என்று சொன்னபோது, 'இல்லை, இல்லை' என்று சிலர் கூச்சலிட்டனராம்—இந்தியை எப்படியும் திணித்துவிட வேண்டும் என்ற மனப்போக்கு படைத்தவர்கள்!

"இதேபோல் முன்பொரு முறை இம்மாநில நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு மாநாட்டில் தமிழில் பேசும்போது அவரைப் பேசவிடாமல் கூக்குரலிட்டுக் கலவரம் செய்தனர். தமிழைக் காதால் கேட்பதே 'மகாபாபம்' என்று நினைக்கின்ற இந்தக் குறைமதியாளர்களோடுதான் நாம் 'ஏகஇந்தியா' என்ற தோளில் கைபோட்டுக் கொண்டு நடக்கவேண்டுமாம்! 'ஏக இந்தியா' என்ற மனப்பான்மை கொள்ளவேண்டுமாம்! வகுப்புவாதம் பேசக்கூடாதாம்! நம்மைப்பற்றி என்னதான் அவர்கள் இனவெறியர்கள் என்று குற்றம் சாட்டினாலும், அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற மொழிவெறியை விட இது அதிகமானதல்ல என்பதை அவர்கள் திட்டவட்டமாக வெளிப்படுத்திகொள்ளுகிற நாள் அதிகத் தூரத்திலில்லை.

வடக்கும் தெற்கும்

"வடக்கையும் தெற்கையும் சமாதானப்படுத்துவதற்காகவே குடியரசுத் தலைவர் 'விந்தியபந்தனம்' கட்டிக்கொண்டிருக்கின்றார். இதனால் தென்னகம் ஏமாந்துவிடப்போவதில்லை. வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் சாவு மணியாகவே இந்தி அமைந்திருக்கிறது என்பதை அவர்களுக்கிருக்கும் இன்றைய அதிகார வெறியில் உணரமுடியாது!

"ஆங்கிலேயரும் இப்படித்தான், 'ஆங்கிலத்தைக் கட்டாயமாக்கிவிட்டால், நமது ஏகாதிபத்திய மாத்தின் அடிவேரில் வெந்நீர் ஊற்றினாலும் அழியாது' என்று நினைத்தார்கள். அந்த ஏகாதிபத்தியக் கல்லறை இந்த ஏகாதிபத்தியவாதிகளுக்கு எச்சரிக்கை செய்யும் என்று நினைக்கின்றோம்.

"திராவிடம் பிரியுமா? — என்று கேட்கிறார்கள்; கண்டிப்பாகப் பிரியும்; அதுதான் நம் கழகத்தின் மூலக் கொள்கை. அந்த விடுதலைப் பாதையை நோக்கி வெகு வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது கழகம். அதன் வேகத்தைத் தடுத்து நிறுத்திவிடலாம் என்று நினைக்கின்றனர்—எதையும் தடுத்து நிறுத்த சக்தியற்றவர்கள்!

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றை மாற்றி எழுதுவோம் என்றவர்கள் இப்போது 'திராவிடத்தைக்

(4-ம் பக்கம் பார்க்க.)

கவர்னர் அல்ல - 'இராஜ்யபால்!'

இலட்சுமணபுரி, ஆக. 26—

சபை அங்கீகரித்திருக்கும் மொழி இந்தி என்பதால், மாநிலத் தலைவரைக் குறிப்பிட்டுப் பேசுகையில் மந்திரிகள் 'கவர்னர்' என்று குறிப்பிடக்கூடாது என்றும், 'இராஜ்யபால்' என்றே குறிப்பிட வேண்டும் என்றும் உ. பி. சட்டசபைத் தலைவர் ஏ. ஜி. கெர் என்பார் குறிப்பிட்டாராம்.

'கவர்னர் ஆட்சேபிக்காதவரை, உறுப்பினர்கள்கூட 'இராஜ்யபால்' என்றே குறிப்பிட வேண்டும்' என்றும் அவர் கூறினாராம்!

கமலாபதி திரிபாதி என்ற உள்நாட்டு மந்திரி, 'கவர்னர்' என்று குறிப்பிட்டபோது, ஒரு உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை கிளப்பி, 'இராஜ்யபால்' என்றுதான் குறிப்பிடவேண்டும்; கவர்னர் என்று குறிப்பிடலாகாது' எனக் கூறினாராம்!

மந்திரியோ, 'இந்திமொழி விரிவாகிவருகிறது; பல அன்னியச் சொற்கள் இந்தி மொழியில் சேர்க்கப்பட்டு வருகின்றன; கவர்னர் என்ற சொல் இந்தி மொழிதானே தவிர, அது இனி அன்னிய மொழியல்ல; எனவே, அதன் உபயோகத்திற்கு ஆட்சேபனை கிளப்பக்கூடாது' என்று பதில் தந்தாராம்!

இதனை ஏற்காமல்தான் சபைத் தலைவர், மேற்கண்டவாறு உத்தரவிட்டாராம்.

பண்டிதரும்-மேனனும்

பெங்களூர், ஆக. 26—

அங்கேரியில் நடைபெற்ற மக்கள் எழுச்சியை உடன் வரவேற்க மறுத்த பண்டித நேரு, ஐ. நா. சபை ஒரு குழு அமைத்து அங்கேரி நிலையை ஆராய வேண்டும் என்று முனைந்தபோது, நடுநிலைமை வகித்ததும், விசாரணைக் குழு வெளியிட்ட முடிவுகளை ஐ. நா.-வில் விவாதிக்கக்கூடாது என்று அவர் கூறிவந்ததும் தெரிந்த ஒன்றாகும்.

ஆனால் இப்போது ஐ. நா. சபையில் அங்கேரி பற்றி விசாரணைக் குழு வெளியிட்ட முடிவுகளை ஆராய எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியான பிறகு, இந்திய பாதுகாப்பு அமைச்சர் வி. கே. கிருஷ்ணமேனன், ஐ. நா. சபை குழுவின் முடிவுகளை பரிசீலிப்பது முறை என்றும், பண்டித நேரு அதை எதிர்க்க ஈடுபடவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

விதைத்தறிகள் உற்பத்தி

'மத்தியப் பிரதேசம், பம்பாய், மைசூர் ஆகியவிடங்களில் உள்ள மூன்று தொழில் நிறுவனங்கள் விசைத்தறி உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றன. 1956-ம் ஆண்டில் மொத்தம் 2,712 தறிகள் உற்பத்தி செய்யப்பட்டன. 1957-ம் ஆண்டில், உற்பத்திவிகிதம் 3,200 ஆக இருந்துவருகிறது. இரண்டாவது திட்டக் காலத்தில் ஆண்டொன்றுக்குச் சராசரி 6,125 தறிகள் தேவையாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது' என்று மக்கள்சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

3,21,256 டன் உப்பு ஏற்றுமதியாயிற்றும்!

இவ்வாண்டில் முதல் ஆறு மாத காலத்தில் மொத்தம் 3,21,256 டன் உப்பு ஏற்றுமதி செய்யப்பட்டது என்றும், 1956-ம் ஆண்டில் இதற்குச் சரியான காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட உப்பின் மொத்த அளவு 1,00,400 டன் என்றும் மக்கள் சபையில் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் தொழிலியல் துணை அமைச்சர் கூறியுள்ளார்.

வியக்கத்தக்க வியாதி!

காய்ச்சல்—ஆனால் உடல் நலம் குன்றுவதில்லையாம்!

ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் இக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனராம்!

இந்தக் காய்ச்சல் ஏற்படும் போது பேசமுடிவதில்லையாம்—ஊமைகளாகக் காட்சியளிக்கின்றனராம்.

மேற்கு ஈரானில் உள்ள கிராமமொன்றில் இந்த வியக்கத்தக் வியாதி பரவியுள்ளதாம்!

4,328 விதைப் பண்ணை அமைக்கப்படும்?

புதுடில்லி, ஆக. 26—

திருந்திய விதைப் பெருக்க, வினியோகத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தேசீய விரிவுத் தொகுதி அல்லது சமுதாய நலத் திட்டப் பகுதியிலும் ஒரு விதைப் பண்ணையை ஏற்படுத்துவதற்காக 25 ஏக்கரா பரப்பளவு உள்ள நிலம் பயன்படுத்தப்படுமாம்.

ஒவ்வொன்றும் 25 ஏக்கர் பரப்பளவுள்ள மொத்தம் 4,328 விதைப் பண்ணைகள் அமைக்கப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆட்சியினருக்கு அக்கறை பிறக்கிறது!

குரலெழுப்பினேம் — கூடுதலான உதவி செய்ய முன்வருகின்றனர்

சென்னை, ஆக. 26—

மத்திய அரசாங்கம் அனுமதித்துள்ள முன்னாள் குற்றப்பரம்பரையினருக்கான திட்டங்களுக்கு ரூ. 5·41 இலட்சமும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான திட்டங்களுக்கு ரூ. 15·21 இலட்சமும் செலவிடப்படுமாம். இத்திட்டச் செலவுகளை மேற்கொள்ள சென்னை அரசாங்கம் அனுமதித்திருக்கிறதாம்.

முன்னாள் குற்றபரம்பரையினருக்காக ஒதுக்கப்படும் நிதியிலிருந்து ரூ $2\frac{1}{2}$ இலட்சம் செலவில் 417 வீடுகள் கட்டவும், ரூ. 50,000 செலவில் 150 பேர்களுக்குத் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கவும் பயன்படுத்தப்படுமாம்.

மற்றும், 360 முன்னாள் குற்றபரம்பரையினர் குடும்பங்களுக்கு, ஒவ்வொன்றுக்கும் ரூ. 500 வீதம் வேளாண்மை உதவித் தொகை அளிக்கவும், மற்றும் மூங்கில் பொருள்கள் செய்தல், பாய் முடைதல், கூட்டுறவு அடிப்படையில் தீக்குச்சி உற்பத்தி போன்ற குடிசைத் தொழில்களில் நான்கு உற்பத்தி பயிற்சி நிலையங்களை நடத்தவும் நிதி பயன்படுத்தப்படுமாம்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்ட நிதி, குடிநீர் கிணறுகளை ஏற்படுத்துதல், வேளாண்மை உதவித் தொகை, குடிசைத் தொழில் வளர்ச்சி, தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற மாணவர்கள் தாங்களாக சொந்தத்தில் தொழில் துவக்க உதவி செய்தல், ஆகிய காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுமாம். வேளாண்மை உதவித் தொகைக்காகவே பெருமளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

போதுமான நிலமுடைய தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு, குடும்பம் ஒன்றுக்கு இரண்டு எருதுகள், விவசாயக் கருவிகள், விதைகள் முதலியன வாங்க ரூ. 285 வீதம் அளித்து அவர்கள் வேளாண்மை நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடும்படி செய்வதே இதன் நோக்கமாம்.

கண்ணாடி வளையல்கள் உற்பத்தி, தோல் பொருள்கள், நூற்பு நெசவு, கைக்குத்தல் அரிசி, கோழி வளர்ப்பு, தையல் வேலை, கருமான் வேலை ஆகிய குடிசைத் தொழில்கள் ரூ. 3,70,000 செலவில் கூட்டுறவு முறையில் அபிவிருத்தி செய்யப்படுமாம்.

சோஷலிசம் பேசுவோர் ஆட்சியில் ஊழியர்கள்படும் அவதி

அஞ்சல் ஊழியர்கள் கூட்டத்தில் கண்டனம்

புதுக்கோட்டை, ஆக. 26—

புதுக்கோட்டை தபால்—தந்தி ஊழியர் கூட்டுச் செயற்குழுவின் ஆதரவின்கீழ் இந்நகர் தலைமைத் தபால் அலுவலகக் கட்டிடத்தில் 18—8—57-ல் தோழர் சேதுராமன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் ஞானையா, 'பொது வேலைநிறுத்தமும்-அதன் வெற்றியும்' என்பது பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சோஷலிச சமுதாயம்பற்றிப் பேசும் அரசாங்கத்தில், ஊழியர்களின் சிறு கோரிக்கைகள்கூடப் புறக்கணிக்கப்படுகிறது; இப்போராட்டம் உண்மையிலேயே, அரசாங்கத்தை விழிப்புறச் செய்தது.

"இரண்டு ஆண்டுக்காலமாக இரண்டாவது சம்பளக் கமிஷன் பற்றிப் பேசவே கூடாது எனக் கூறியதோடல்லாமல், வேலைநிறுத்த அறிவிப்பு கொடுப்பதற்கு முன், மக்கள் சபையில், இரண்டாவது சம்பளக் கமிஷன் அமைக்க வேண்டாம் என நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசாங்கம் இக்குறுகிய காலத்திற்குள் மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது; இதற்கு ஊழியர்களின் கட்டுப்பாடும், ஒற்றுமையும்தான் காரணம்."

பின்னர், தோழர்கள் சந்திரசேகர், கோவிந்தராசு, வெங்கடபெருமாள், சீனிவாசன் ஆகியோர் பேசினர்.

தவக்கத்தில் தோழர் பரசுராம் வரவேற்புரை கூறினார்.

நீண்ட நாளைக்குப்பின்!

கேட்டது கிடைத்தது!

சென்னை, ஆக. 26—

சென்னை நகரசபையின் நீண்டநாளைய கோரிக்கையொன்றிற்கு இப்பொழுதுதான் சென்னை அரசாங்கம் இணங்கிவந்துள்ளது!

சைதாப்பேட்டையிலும், நுங்கம்பாக்கத்திலும் நகரசபையால் நடத்தப்பட்டுவரும் இரு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் ஆசிரிய மானியம் வழங்க சென்னை சர்க்கார் முடிவு செய்துவிட்டதாகத் தெரிகிறது. இதற்காக ரூ. 56,700 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மற்ற ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்திவரும் உயர்நிலை (செகண்டரி)ப் பள்ளிகளுக்கு அரசாங்கம் பாதி மான்யம் அளிப்பது போலவே, சென்னை நகரசபையால் நடத்தப்படும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மானிய உதவி அளிக்கவேண்டுமென சென்னை நகரசபை நெடுநாளாகக் கேட்டு வந்தது.

அந்தமானில் ஆக்க வேலைகள்

மத்திய அமைச்சர் தகவல்

புதுடில்லி, ஆக. 26—

மாநிலங்கள் சபையில் உணவு—விவசாய மந்திரி, அந்தமான் காடுகள் அபிவிருத்திக்காக இந்திய சர்க்கார் செய்துவரும் முயற்சிகளை விவரித்தார்.

'முதல் திட்டத்தில் காலனி ஏற்பாடும், சாலை ஏற்பாடும் முக்கிய அம்சங்களாக இருந்தன; 2-வது திட்டத்தில் வனத்துறை பற்றிய 12 திட்டங்கள் உள்ளன; இத்திட்டப்படி 2,000 சதுர மைல் பரப்பளவில் வேலை நடக்கும். குடியிருப்புக்காக 20,000 ஏக்கரா அல்லது 30 சதுர மைல் காடு வெட்டி அழிக்கப்படும்; அங்கே மக்கள் குடியேறி சாகுபடி செய்யலாம். மீதி காடுகள் பாதுகாக்கப்பட்டு அபிவிருத்தித் திட்டப்படி உபயோகித்துக்கொள்ளப்படும்.

உங்களுக்குத் தெரியுமா?

1953-ம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து சென்ற நான்கு ஆண்டுக் காலத்தில், சர்க்கார் கணக்கில், மொத்தம் ரூ. 68,73,00,000 மதிப்புள்ள 13,27,000 டன் அஸ்கா சர்க்கரை இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது; இதன் விற்பனையின் மூலம் சுமார் ரூ. 107 கோடி கிடைத்திருக்கிறது.

இந்தியாவில் சுதந்தர இயக்கச் சரித்திரத் தொகுப்பு வேலை சம்பந்தமாக இதுவரையில் மொத்தம் ரூ. 4,28,206-3-9 செலவழிக்கப்பட்டிருக்கிறதாம்!

இரயில் விபத்தில்

கோரப்பட்ட நஷ்ட ஈடு

"மெகபூப் நகர் இரயில் விபத்தில் நஷ்டஈடு கோரி மொத்தம் 192 கோரிக்கைகள் தரப்பட்டன; அவைகளில் 163 மனுக்கள் சம்பந்தமாக, ரூ. 5,10,738-1-8 நஷ்ட ஈடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது; ரூ. 150 ஒரு தாவாக்காரருக்கு இடைக்கால நிவாரணமாகக் கொடுக்கப்பட்டது; ஆனால் அவரது தாவா நிராகரிக்கப்பட்டபடியால் கொடுத்த தொகை திரும்ப வசூலிக்கப்படுகிறது; 27 தாவாக்கள் நிராகரிக்கப்பட்டன; ஒரு தாவா வாபஸ் பெறப்பட்டது; இன்னும் ஒன்று பாக்கி இருக்கிறது" என்று, மாநிலங்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

தஞ்சை பண்ணையாள் நியாயவாரச் சட்டங்கள்

புதுவையிலும் அமுலாகும்?

தற்பொழுது சென்னை மாநிலத்தில் நடைமுறையிலிருக்கும் தஞ்சை பண்ணையாள் சட்டத்தையும், நியாயவாரச் சட்டத்தையும் புதுவை மாநிலத்திலும் நடைமுறைக்குக் கொண்டுவர, புதுவை சட்டசபைக் காங்கிரசுக் கட்சி நகல் மசோதா ஒன்றை வகுத்திருப்பதாகவும், இந்த மாநிலத்தின் ரயத்துக்களுக்கும், குடியானவர்களுக்கும் உதவி செய்வதற்காக அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் இம்மசோதா நிறைவேற்றப்படும் என்றும், புதுவை விவசாய அமைச்சர் திரு. பி. சண்முகம் தெரிவித்திருக்கிறார்.

புதுக்கோட்டை மகா கணபதி ஆலை கதவடைப்பு

புதுக்கோட்டை, ஆக. 25—

புதுக்கோட்டை மகா கணபதி ஆலை நேற்று அதன் நிர்வாகிகளால் கதவடைப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

விடுமுறைநாளான கடந்த 23-ந் தேதியன்று தொழிலாளர்கள் வேலைக்கு வரவேண்டுமென்று நிர்வாகிகள் அறிவித்ததையொட்டி ஆலை நிர்வாகிகளுக்கும்—தொழிற்சங்க நிர்வாகிகளுக்குமிடையே நடந்த பேச்சுவார்த்தையில், தொழிலாளர் கோரிக்கைக்கு ஆலை நிர்வாகிகள் இணங்க மறுத்துவிட்டனராம். இதன் விளைவாக, 23—8—57-ல் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவில்லை. மறுநாள் (24—8—57) வழக்கம் போல் தொழிலாளர்கள் வேலைக்குச் சென்றபோது, மில் நிர்வாகிகள் கதவடைப்புச் செய்திருந்தனராம்.

கோவா திடீரென விடுதலை பெறுமாம்!

மேனன் ஆரூடம்

எர்ணாகுளம், ஆக. 24—

"கோவா திடீரென விடுதலை பெற்றுவிடலாம்; ஆனால் அது, எதிர்தரப்பின் கொள்கையையும், பதிலையும் பொறுத்ததாகும்" என்று, இங்கு வி. கே. கிருஷ்ண மேனன் பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

"இந்தியாவின் பாதுகாப்பிற்கு கோவா ஒரு அச்சுறுத்தலாக இருக்கும் என நான் கருதவில்லை. ஒரு அன்னிய வல்லரசு இங்கு நிலைகொண்டிருக்கிறது. ஒரு அன்னிய வல்லரசு நமது மண்ணில் இருப்பது, இந்தியாவின் கௌரவத்திற்கு இழுக்கென்று கூறுவேன்" எனவும் மேனன் கூறினாராம்.

"ஆனால், அதற்காக அண்மையில் நடைபெற்றதைப் போன்று மக்கள் இயக்கத்திற்கு சர்க்கார் இடமளிக்கப்போவதில்லை. மக்கள் கோவாவிற்குள் நுழைவது சிறைப்படுவது, அவதிப்படுவது போன்ற சம்பவங்கள் திரும்பவும் நிகழ்வதை நாங்கள் விரும்பவில்லை" என்றும் அவர் கூறிருகிறியிருக்கிறார்.

மறைவு

நடுமலை எஸ்டேட் தி. மு. கழகத் தோழர் வெள்ளகன், 15—8—57-ல் மேல்களைபட்டியில் இயற்கையெய்தியமைக்கு நடுமலை தி. மு. கழகத் தோழர்கள் தங்களுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

* * *

'ஆரணி தி. மு. க செயற்குழுவின் முன்னாள் உறுப்பினர் தோழர் கே. கோவிந்தன் தம்முடைய 27-வது வயதில், 18—8—57-ல் இயற்கை எய்தினார் என்கிற செய்தியை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என ஆரணி தி. மு. க. செயலாளர் அறிவிக்கிறார்.

* * *

காட்டுமன்னார்குடி சத்திய வாணிமுத்து சொற்பயிற்சி மன்ற உறுப்பினரும், லால்பேட்டை தி. மு. க. உறுப்பினருமான தோழர் ச. சு. மணி அவர்களின் தந்தையார் சண்முகம் அவர்கள் 15—8—57-ல் இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

* * *

வேலூர் கசப்பா தி. மு. க. செயலாளர் தோழர் வி. கே. தட்சிணாமூர்த்தி அவர்களின் தந்தையார் 12—8—57-ல் இயற்கையெய்தியமை குறித்து கசப்பா தி. மு. க. சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

'நம் நாடு' இதழ் விற்பனையாளர் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் 'நம் நாடு' இதழை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை; நிபந்தனைகளுக்கு விண்ணப்பித்துக் கொள்க:

பூதலூர்
அறந்தாங்கி
திண்ணனூர்
மதுராந்தகம்
கல்லிடைக்குறிச்சி
இராஜசிங்கமங்கலம்
பேளூர் (சேலம் மாவட்டம்)
ஆலமரத்துப்பட்டி (கரூர் வட்டம்)

—நிர்வாகி: 'நம் நாடு'

மக்களைத்தான் கண்டிக்க வேண்டுமாம்

ஏனெனில் அவர்கள் திட்டத்தை அங்கீகரித்தார்களாம்!

திட்டம்தான் கஷ்டங்களுக்குக் காரணமாம்!

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் விசித்திர வாதம்

புதுடில்லி, ஆக. 26—

"இப்போதைய அன்னியச் செலாவணி பற்றுக்குறை நிலைக்கு எவரையும் குறை சொல்ல முடியாது. அதிகரித்துவரும் அன்னியச் செலாவணித் தேவையைச் சமாளிக்கவும், இரண்டாம் திட்டத்திற்குத் தேவையான நிதி பெறுவதற்கும், முதல் திட்டத்திலிருந்தே சர்க்கார் முயற்சி செய்துவந்திருக்கிறது; என்றாலும், இப்போதைய பற்றுக்குறை நிலையின் கடுமையைக் குறைத்து மதிப்பிட்டுக் காட்டவோ, செய்யவேண்டிய காரியங்களில் உள்ள கஷ்டங்களை மறைக்கவோ சர்க்கார் விரும்பவில்லை"

என்று நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, மக்கள்சபையில் தெரிவித்திருக்கிறார்.

மேலும் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது :—

"இப்போதைய அன்னியச் செலாவணி பற்றுக்குறை நிலைக்கு வந்தது எப்படி என்பதை ஆராய ஒரு கமிஷன் நியமிக்க வேண்டும் என்று இங்கு கோரப்பட்டது. அப்படி ஏதேனும் ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டால் அதனைச் சந்திப்பதற்கு நான் தயார்தான்.

"ஆனால் நியமிக்கப்படுகிற குழு, திட்டத்தை அங்கீகரித்த மக்களைத்தான் கண்டிக்க வேண்டி வரும். ஏனெனில், திட்டம்தான் இன்றைய கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் — கடந்த காலத்திய கொள்கை அல்ல!

"அன்னியச் செலாவணியைப் பொருத்த கஷ்டங்கள் சர்க்காருக்குத் தெரிந்தே இருக்கின்றன; திட்டத்திலேயே அது எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், நாட்டின் கஷ்டங்கள் பெருகியிருப்பதற்குக் காரணங்கள் பலவாகும்.

"திட்டங்களில் சிலவற்றிற்கு ஒதுக்கப்பட்டிருந்த தொகை, ஏற்கனவேயே போதுமானவையாக இருக்கவில்லை. இறக்குமதியாகும் பொருள்கள் பலவற்றின் விலை உயர்ந்துவிட்டது. போதாததற்கு நாம் ஏராளமான அளவு உணவுப் பொருள்வேறு இறக்குமதி செய்ய நேரிட்டுவிட்டதுடன், இராணுவச் செலவையும் அதிகரிக்க வேண்டி வந்துவிட்டது. இறுதியாக தனியார் துறையில், எதிர்பார்த்ததைவிட முதலீட்டுச் செலவு அதிகரித்துள்ளது.

"இந்த மக்கள் சபை இரண்டாம் திட்டத்தை அங்கீகரித்த போது, அதில் அன்னியச் செலாவணிப் பற்றுக்குறை தெளிவாகக் குறிக்கப்பட்டுத்தான் இருந்தது.

அன்னிய செலாவணி நிலை

"1956-ம் ஆண்டு மார்ச் திங்களில் 746 கோடி ரூபாயாக இருந்த அன்னியச் செலாவணி, இப்போது ரூ. 393 கோடியாகக் குறைந்துவிட்டது. இந்த ஒன்றரை ஆண்டில் மட்டும் ரூ. 353 கோடி வரை நாம் அதில் செலவிட்டிருக்கிறோம் என்பதுடன், சர்வதேசச் செலாவணி நிதியிலிருந்துவேறு ரூ. 95 கோடி வரை நாம் செலவிட்டிருக்கிறோம். இந்த அளவு அதிகச் செலவிற்குக் காரணம், அபிவிருத்தித் திட்டங்களுக்காக நாம் ஏராளமான பொருள்களை இறக்குமதி செய்திருப்பது தான்."

மாநிலங்களுக்குத் தரப்பட்டுள்ள கடன் பற்றிக் குறிப்பிடுகையில் டி. டி. கே., இதுவரை மத்திய சர்க்கார் மாநில சர்க்கார்களுக்கு ரூ. 800 கோடிவரை கடனாகத் தந்து உதவியுள்ளது என்றும், இந்தக் கடன்கள் மத்திய சர்க்காரின் வரி வசூலிலிருந்து தரப்பட்டிருப்பதால், இவற்றை மாநிலங்கள் கட்டாயமாகத் திரும்பத் தந்துவிட வேண்டும் என்றும், இந்த விவகாரத்தினை குறுகிய மாகாணப் பித்துக்கொண்ட கண்ணோட்டத்திலிருந்து பார்க்கக்கூடாது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

சர்க்கார் கடைபிடித்துவரும் இறக்குமதிக் கொள்கை, நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு ஊக்க மூட்டுவதா யமைந்திருப்பதாகவும் சிலர் குற்றஞ்சாட்டியதுபோல, சர்க்காரின் இறக்குமதிக் கொள்கை அன்னியச் செலாவணியை வீணாக்கும் வகையில் இருக்கவில்லை என்றும் கிருஷ்ணமாச்சாரி கூறியிருக்கிறார்.

திட்டத்தில் பிரதானமான வற்றை நிறைவேற்றுவதற்குக் கூட, எல்லாப் பகுதிமக்களும் பெருந் தியாகம் செய்தாக வேண்டும் என்றும், அன்னிய உதவியும் பெருமளவில் கிடைத்தாக வேண்டும் என்றும் கிருஷ்ணமாச்சாரி கூறியிருக்கிறார்.

'இரண்டாம் திட்டம் வெட்டப்படும்'

'இது தவிர்க்க முடியாது' என்கிறார் நிதி மந்திரி

டில்லியின் காலம்கடந்த ஞானோதயம்

புதுடில்லி, ஆக. 26—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தைச் சற்று சுருக்க—குறைக்க வேண்டும்" என்று, இப்போது, நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி மக்கள் சபையில் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

திட்டத்தில் முதலிடம் தரப்படவேண்டிய முக்கியமான திட்டங்களைக் குறித்துப் புனராலோசனை செய்யும் வேலையில் இப்போது திட்டக் குழு கவனம் செலுத்திவருகிறதாம்!

நிதி ஒதுக்கல் மசோதா விவாதத்திற்குப் பதிலளித்து மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, மக்கள் சபையில் பேசுகையில், 'இதனை—திட்டத்தை மாற்றுதல் என்றோ, முதலிடம் தரப்படவேண்டியவற்றை திரும்பவும் வரிசைப்படுத்துதல் என்றோ கூறலாம்; ஆனால் நாம், மிக முக்கியமான திட்டங்களில்தான், திட்டத்தின் பிரதானமான—மையமான அம்சங்களில்தான் கவனம் செலுத்த வேண்டும்; அதாவது, உருக்குத் தொழிற்சாலைகள், சுரங்க வேலைகள், மின்சார உற்பத்தி, போக்குவரத்து இவற்றில்தான் கவனம் செலுத்த முடியும்' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

திட்டக்குழு, இவை குறித்து இப்போது பரிசீலித்து வருவதாகவும், திட்டத்தில் ஏற்கனவேயே பிரதானமானவையாகக் கருதப்படுவனவற்றைத் தவிர வேறெந்த புதுத் திட்டங்களையும் சர்க்கார் அங்கீகரிக்காது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

★

கஷ்ட காலம் வருகுது-கஷ்ட காலம் வருகுது!

புதுடில்லி, ஆக. 24—

"அடுத்த இரண்டு ஆண்டுகள் மிகக் கஷ்டமான ஆண்டுகளாக இருக்கப்போகின்றன; அன்னிய உதவி, தக்க சமயத்தில் கிடைத்தாலன்றி, கஷ்டங்கள் குறையுமெனக் கூறுவதற்கு இல்லை"

என்று, நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி மக்கள் சபையில் ஓலமிட்டிருக்கிறார்.

"இரண்டாம் திட்டத்தின் பிரதானமான—மையமான திட்டங்களை நிறைவேற்றுவதற்கே நமக்குக் கணிசமான அளவு அன்னிய உதவி தேவைப்படுகிறது. இந்த அன்னிய உதவி கிடைத்தாலன்றி, நமது சென்ற ஆண்டின் நிலுவையைச் சரிக்கட்டுவது மிகக் கஷ்டமாயிருக்கும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

காட்பாடிவிபத்து

மேலும் ஒருவர் மரணம்

வேலூர், ஆக. 27—

சென்ற 21-ந் தேதியன்று காட்பாடி புகைவண்டி நிலையத்தில் பட்டாசுக்கட்டுகள் வெடித்ததனால் ஏற்பட்ட விபத்தில் காயம் பட்டவர்களில் பெருமாள் என்பவர் நேற்று முன்தினம் மருத்துவமனையில் உயிர் நீத்தார். இவருடன் சேர்த்து இதுவரை மேற்படி விபத்தில் இறந்தவர்களின் தொகை 8 ஆகும்.

நங்கவரம் அறப்போர்

மூன்றும் நாள் நிகழ்ச்சி: மேல் விவரம்

திருச்சி, ஆக. 26—

நேற்று நங்கவரம் பகுதியில் 200 உழவர்கள் ஆண்களும் பெண்களுமாக வயலில் இறங்கி உழவுத் தொழிலில் ஈடுபட்டனர். யாரும் கைது செய்யப்படவில்லை. முதல் நாள் வயலில் இறங்கியவர்களில் குறிப்பிட்ட 19 பேரை போலீசார் தனியே அழைத்து விசாரணை செய்து அவர்களைக் கைது செய்யாமல் திரும்ப அனுப்பி விட்டார்கள்.

இன்று 420 விவசாயிகள் வயலில் இறங்கி வேலையில் ஈடுபட்டனர். ஒரே வயலில் மட்டும் மிராசுதாரர்கள் அழைத்துவந்துள்ள 'கருங்காலி' உழவர்கள் போட்டியாக இறங்கி வேலை செய்யத் துவங்கினர்.

அவர்களிடம் பரம்பரை உழவர்களும் தாய்மார்களும் சென்று, 'நீங்களும் எங்களைப்போல பிள்ளை குட்டிக்காரர்கள் அல்லவா? தயவு செய்து திரும்பிவிடுங்கள்' என்று மன்றாடிக் கேட்டுக்கொண்டார்கள்.

'கருங்காலி'களின் பிரவேசத்தால், உழவர்களின் பணியில் எந்தவிதமான குந்தகமும் ஏற்படவில்லை.

வெளியூரிலிருந்து வந்துள்ள தற்காலிக உழவர்களைத் திரும்பிச் செல்லுமாறும், துரோக வேலையில் ஈடுபடவேண்டாமென்றும் கேட்டுக்கொண்டு, விவசாய முன்னேற்ற சங்கச் சார்பில் ஒரு வேண்டுகோள் வெளியீடு, ஆயிரக்கணக்கில் வழங்கப்பட்டிருக்கிறது.

அதிகாரிகள் இன்னும் சமாதான முயற்சியில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

விவசாய முன்னேற்றச் சங்கத்தார் உருப்படியான சமாதானத்திற்கு எந்த நேரமும் தயாராக இருப்பதாகத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மு. கருணாநிதியும், திருச்சி மாவட்டத் தி. மு. கழகச் செயலாளர் அன்பில்-தர்மலிங்கமும், விவசாய முன்னேற்றச் சங்கத் தலைவர்கள் முத்துகிருஷ்ணன், முத்து ஆகியோரும் அதிகாரிகளிடம் நேற்றைய தினம் நடந்த பேட்டியின் போது கூறியுள்ளனர்.

திருச்சி மாவட்ட ரெவினியூ டிவிஷனல் அதிகாரி, டி. ஒய். எஸ்.பி., மற்றும் போலீஸ் உயர்தர அதிகாரிகள் போலீஸ் படைகள் புடைசூழ நங்கவரத்தில் முகாம் அமைத்துள்ளனர்.

நான்காம் நாள்

நான்காம் நாளான இன்றும் (26—8—57) விவசாயிகள் தொடர்ந்து அறப்போரிலீடுபட்டுள்ளனர். அமைதி நிலவுகிறது. யாரும் கைது செய்யப்படவில்லை. விவரம் பின்னர்.

அண்ணா தலைமையில்

கோ. சண்முகம்—குப்பம்மாள் திருமணம்

கோ. சண்முகம்—குப்பம்மாள் ஆகியோருக்கு 1—9—57 காலை 9-மணியளவில் வடக்குத் தியாகராயநகர், 41, நகராண்மைக் கழக இல்லத்தில் அண்ணா தலைமையில் திருமணம் நடைபெறும்.

தோழர்கள் க. அறிவழகன், ஏ. எஸ். ஜேசுபாதம், மா. செங்குட்டுவன், மற்றும் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

சி.பி.சிற்றரசு விளக்கம்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

காப்போம்' என்கிறார்கள். யாரிடமிருந்து — எப்போது —எப்படி — ஏன்? என்ற வினாக்களைத் தூது அனுப்பியிருக்கிறோம்—பதில் வந்து சேரவில்லை; இனி வந்து சேரும்.

"'கட்டை விரலை எடுத்துவிடுவேன் என்றவர்கள், இப்போது, அதன் சுட்டுவிரலை கவனிக்கிறார்கள்; 'மெத்த அவசரம் வேண்டாம்; ஒரு பத்து ஆண்டுகள் தவணை கொடுங்கள்; நான் அனுபவிக்க வேண்டியதெல்லாம் இந்தக் கூடாரத்தில் அனுபவித்துவிட்டு, பிறகு உங்கள் கூடாரத்திற்கு வேண்டுமானாலும் வந்து சேருகிறேன்' என்று சொல்லாமல் சொல்லுகிறார்கள்.

"வடநாட்டு வஞ்சகத்தை நம் நாட்டிலே உள்ள எல்லாக் கட்சிக்காரர்களும் தெரிந்து கொண்டுதான் இருக்கிறார்கள். நாம் அதனை வெளியே பகிரங்கமாகச் சொல்லிக் கொண்டிருக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம்; அவர்கள் கடிவாளத்தால் அடக்கப்பட்டிருக்கிறார்கள்; அவ்வளவுதான்.

"திராவிடம் பிரிவதற்கான நல்ல அறிகுறி அரசியல் வானிலே தெரிகின்றது. அந்த வெளிச்சத்திலேயே நம் விடுதலைப் பாதையின் எல்லையை அடைவோமாக என்று கேட்டுக்கொள்கின்றேன்."

மாநில சர்க்கார் ஊழியர் கோரிக்கைகள்

'வெகு நியாயமானது' என பண்டிதர் ஒப்பம்

சம்பளக் கமிஷன் விசாரணை குறித்தும் கருத்து

புதுடில்லி, ஆக. 25—

'மத்திய சர்க்கார், மற்றும் மாநில சர்க்கார் ஊழியர்கள், குறிப்பாக கெசட் பதிவு பெறாத ஊழியர்கள் பெறும் சம்பள விகிதங்களில் ஏற்றத் தாழ்வு இருக்கத் தேவை இல்லை' என்று பண்டித நேரு, தென் மாநில சர்க்கார் ஊழியர் தூதுக் குழுவினிடத்தில் கருத்தறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

'நிறுவப்பட்டுள்ள சம்பளக் கமிஷன், மாநில சர்க்கார் ஊழியர்களின் சம்பளம், மற்றும் பஞ்சப்படி உயர்வுக் கோரிக்கைகளையும் கவனிக்க வேண்டும்' என்று தூதுக்குழுவினர் முறையிட்டிருக்கின்றனர்.

'இந்தக் கோரிக்கை வெகு நியாயமானது' என்றும் பண்டிதர் ஒப்புக்கொண்டிருக்கிறார்; என்றாலும், 'கமிஷன் இந்த வேலையையும் மேற்கொண்டால் அறிக்கை தருவதில் காலதாமதம் ஆகும்' என்றும் கூறினாராம்.

தூதுக் குழுவினரோ, இப்போது மாநில சர்க்காரைக் கலந்தாலோசித்துக்கொள்ள முடியும் என்றும், கமிஷனுக்கு ஒரு உப-குறிப்பு மூலம் இந்த வேலையைத் தரலாம் என்றும், மத்திய சர்க்கார் ஊழியர் கோரிக்கை பற்றிக் கவனிக்கும் போதே இதனைக் கவனிக்காவிடினும் பின்னர் கவனிக்கலாம் என்றும் பண்டிதருக்கு எடுத்துரைத்திருக்கின்றனர்.

இதன் பேரில் பண்டிதரும் இந்த யோசனையைக் கவனிப்பதாகக் கூறியிருக்கிறார் என்றும் தூதுக்குழுவினர் தகவல் தந்திருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அறிஞர் அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.